# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,042 — 1919 ம் ஞு ஆவணிமீ 8 ந் திகதி வெள்ளிக்கிழமை.



## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1892 ம் ஆண்டு 18 ம் இலக்க பிரமாணத்தின் 9 E (2) (d) பிரிவின்படி கொழும்பு டிஸ்திறிக் சுகாதார சங்கத்தால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திர சபையாரின் ஆலோசனையோடு உத்தமஞர் தேசாதிபதியாரின் அனுமதிபெற்ற பின்வரும் விதானங்கள் எல்லாரும் அறியும்படி இத்தால் பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

உத்தமஞர் கட்டளைப்படி,

கொழும்பு, கொலோனியல் சகதித்தார் கந்தோர்,
1919 ம் ஞு ஆவணிமீ 5 ந் வ.

ஏ. எஸ். பாகடென்,
அக்டிங் கொலோனியல் சகதித்தார்.

1. சனங்கள் புளங்கிவரும் கட்டடங்களிலும் கூலி வண்டிகளுட்படப் பிரசித்த வண்டிகளிலும் ஒருவரும் காறவும்படாது துப்பவும்படாது.

2. அதற்கென்று வைத்திருக்கும் படிக்கங்களுக்கு எல்லாமல் வேறு ஒரு இடத்திலும் பிரசித்த சந்தையில் அல்லது அதைச்சேர்ந்த இடத்தில் ஒருவரும் காறவும்படாது துப்பவும்படாது.

---

### காணி விற்பனவுகள்.

**No. 895, N. P.**—1919 ம் ஆண்டு புரட்டாதிமீ 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 1 மணியளவில் தன் ஆபிசில், வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொலப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்தவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 16 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுபற்றும் மது பகுதிகளிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தீர்ப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 5,028. குறிச்சி—நாரந்தனை. உறுத்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | மகவிற்காடுந்தறுக்கடையும .. | வேலாயுதர் கணபதி .. | தென்னைக்குந்தகுந்தது .. | 1 | 2 | 5 | 20 |
| 2 | ஷை .. | வேலாயுதர் தம்பையா .. | ஷை .. | 4 | 3 | 36 | 16·50 |
| 3 | ஷை .. | — .. | ஒழுங்கைநிலம் விற்கிறதில்லை .. | 0 | 1 | 37 | — |
| | பிளான் இலக்கம் 5,030. குறிச்சி—நாரந்தனை. உறுத்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | தளவில்குள்கோடை .. | — .. | வாய்க்கால்நிலம் விற்கிறதில்லை .. | 0 | 0 | 20 | — |
| 2 | ஷை .. | இ. ஆ. நாகநாதர் .. | வயலுக்கேற்றது .. | 0 | 3 | 0 | 32 |
| | பிளான் இலக்கம் 5,061. குறிச்சி—ஊரளி. உறுத்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | மணல்திடல் .. | — .. | வாய்க்கால நிலம் விற்கிற தில்லை .. | 0 | 1 | 9 | — |
| 2 | ஷை .. | குமாரவேலு ஆறுமுகம் .. | தென்னைக்கேற்றது .. | 2 | 3 | 28 | 17 |
| | பிளான் இலக்கம் 5,067. குறிச்சி—கைதடி. உறுத்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | தாவளைவத்தை .. | சின்னத்தம்பி பொன்னையா .. | புகையிலைக்கேற்றது .. | 0 | 2 | 29 | 80 |
| 2 | ஷை .. | — .. | ரோட்டுநிலம் விற்கிறதில்லை .. | 0 | 0 | 29 | — |
| | பிளான் இலக்கம் 5,084. குறிச்சி—காணவாய் தெற்கு. உறித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | வரிச்செம்பாடு .. | — .. | பாதைநிலம் விற்கிறதில்லை .. | 0 | 0 | 23 | — |
| 2 | ஷை .. | இ. ஏகாம்பரம் .. | வயலுக்கேற்றது .. | 7 | 0 | 9 | 20 |
| 3 | ஷை .. | — .. | பாதைநிலம் விற்கிறதில்லை .. | 1 | 0 | 0 | — |
| 4 | ஷை .. | — இ. ஏகாம்பரம் .. | புகையிலைக்குத்தகுந்த .. | 2 | 0 | 16 | 25 |
| | பிளான் இலக்கம் 5,090. குறிச்சி—தம்பாலை. உறித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 4 | பிட்டிமண்டிக்மக்கொடியாகாடு | ஆ. வேலுப்பிள்ளை .. | தென்னைக்குத் தகுந்த .. | 24 | 1 | 27 | 25 |
| | பிளான் இலக்கம் 5,092. குறிச்சி—சவிபுரம். உறித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | மருவை .. | — .. | இரா முருகேசவும் வன்னிராசனும் செய்கை .. | 1 | 2 | 18 | 200 |
| 2 | மருவை .. | — .. | ஆ. இராமுவும் வி. தாமோதரரும் செய்கை .. | 2 | 1 | 9 | 200 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கொவர்ணமேந்து ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோர் தலைவரிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சகதித்தார் கந்தோர்,
கொழும்பு, 1919 ம் ஞு ஆவணிமீ 6 ந் வ,

ஏ. எஸ். பெக்டன்,
அக்டிங் கலோனியல் சகதித்தார்.

அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கோமகமத்தில் ரேட்டை பெருப்பிக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 17,010. குறிச்சி—கோமகம.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றா. ப. |
|---|---|---|---|---|
| 1 | இத்தகடவலயெனவத்த | தோட்டமும் சிமேந்தினுல் கட்டப்பட்ட வீட்டின் பகுதியும் | டி. எல். டாவித் வெதருளேயும் என்னும் 2 பேரும் | 0 0 3·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அககாணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஹு புரட்டாசி (செப்ரம்பர்)மாசம் 1 ந் தேதியிலன்று 12 மணிக்கு முற்பகல் இந்தக் கந்தோரில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1919 ம் ஹு ஆவணிமீ 5 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கீன்கெண்ட என்னுமிடத்தில் ஓர், ஆண் பிள்ளைகள் சுதேச கல்விகற்கும் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலககம் 17,013. குறிச்சி—கீன்கெண்ட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றா. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெல்காகாவத்த .. | தென்னந்தோட்டம் | மறலகே இமாலியானுகுறேயும் மற்றவர்களும் | 1 0 5·4 |
| 2 | மறககலந்த .. | ஷை .. | ஜயமானமொகோத்திகே டொன் கிறிகங்கா றிஸ் அப்புவின் உருத்தாளர் | 0 0 9 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புகொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைககொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஹு புரட்டாதி மாசம் 1 ந் தேதியிலன்று காலை 12 மணிககு இக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமககு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற கேட்டுககொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1919 ம் ஹு ஆவணிமீ 6 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொலனுவ றெயில் பாதைக்கு "மெயின் லைன்" றெயில் பாதை போடுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,014. குறிச்சி—மீற்ஓட்டமுள.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றா. ப. |
|---|---|---|---|---|
| 1 | வோடவத்தை .. | ஓர் வாய்காலின் பகுதி .. | யெ, பி. மெண்டிஸ் .. | 0 0 0·1 |
| 2 | கலியாவத்தை .. | 1 தென்னமரம் முள்ளது .. | கெ. எ. சிமான் சில்வா .. | 0 0 3·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஹு புரட்டாசி (செப்ரம்பர்) மாசம் 1 ந் தேதியிலன்று 11 மணி முற்பகல் இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1919 ம் ஹு ஆவணிமீ 5 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினை 7 ம் பிரிவின் பிரகாரம் தம்பலகாமக் கமப்பாதைக்கு ஒரு சங்கிலித் தரை விடவேண்டியதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,427. குறிச்சி—தம்பலகாமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றா. ப. |
|---|---|---|---|---|
| 1 | சப்பாமோட்டை .. | நெற்செய்கைக்கேற்றது .. | பொன்னம்பலம் கைம்பெண் சின்னச்சி | 0 0 13·9 |
| 2 | கட்டடிவெட்டுவன் .. | நெல்வயல் .. | அ. உ. செயினதீன் காஜியாருப் வேதிரு வரும் | 0 0 10·5 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 21·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணிகளை எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ௵ ஆவணி மாதம் 28 ௨ தேதியிலன்று காலை 10 மணிக்கு திருக்கோணமலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருகோணமலைக் கச்சேரி,
1919 ம் ௵ ஆடி௴ 24 ௨.

டபிள்யு. கே. எச். கம்பெல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலககச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஷ்ரூட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

உபமுடிவுக்கிராமப்படம் நொ. 252. கிராமம்—கட்டுகம்பளைக் கற்பற்றில் பிற்றிக்கல்கோறளையில் ருவிற்ரு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 4A | டங்ககக்கும்புறகெல .. | ஷ்ரூட்டு .. | பீ. இராசபக்ஸா .. .. | 0 | 0 | 10 |
| 4B | டங்ககக்கும்புற .. | ஷை .. | மல்நெயிதேயும் மற்றையோரும் .. | 0 | 0 | 8 |
| 5A | டஙககக்கும்புறகெல .. | ஷை .. | பி. இராசபக்சா .. .. | 0 | 0 | 4 |
| 6A1 | சியம்பலககவத்தர .. | திறந்தநிலம் .. | கே. அப்புசிஞ்ஞோவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 1·25 |
| 9A | டங்ககும்புறபில்லாவ .. | சேனைநிலம் .. | பி. மல்நெயிதேயும் மற்றவர்களும் .. | 0 | 0 | 21·50 |
| 9B | சியம்பலககவத்தஎனு .. | ஷை .. | கே. அப்புசிஞ்ஞோவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 3·50 |
| 9C | சியம்பலககவத்த .. | தென்னந்தோட்டம் .. | ஷை .. .. | 0 | 0 | 6·50 |
| 9D | ஷை .. | ஷை (பகுதி) .. | ஷை .. .. | 0 | 0 | 1·50 |
| 9E | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 20 |
| 10A | டங்ககக்கும்புறஎன .. | சேனைநிலம் .. | பி. இராசபக்ச .. .. | 0 | 0 | 10·25 |
| 11A | டங்ககக்கும்புற .. | ஷ்ரூட்டு .. | பி. மல்நெயிதேயும் மற்றையோரும் .. | 0 | 0 | 6 |
| 11B | ஷை .. | ஷ்ரூட்டு .. | ஷை .. .. | 0 | 0 | 11 |
| 11C | டங்ககக்கும்புறஎன .. | சேனைநிலம் .. | பி. இராசபக்சா .. .. | 0 | 0 | 1 |
| 11D | டங்ககக்கும்புறப்பில்லாவ .. | ஷை .. | பி. மல்நெயிதேயும் மற்றையோரும் .. | 0 | 0 | 0·25 |
| 11E | சியம்பலகாகவத்த .. | தென்னந்தோட்டம் (பகுதி) .. | கே. அப்புசிஞ்ஞேவும் மற்றையோரும் .. | 0 | 0 | 3 |
| 11F | டங்ககக்கரும்புற்கெல .. | ஷ்ரூட்டு .. | பி. இராசபக்சா .. .. | 0 | 0 | 0·25 |
| 22A | அம்பலன்கும்புறஎன .. | ஷ்ரூட்டு .. | பீ. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 15·50 |
| 22B | அம்பலன்கும்புற .. | ஷ்ரூட்டு .. | ஷை .. .. | 0 | 0 | 31 |
| 27A | பலுககக்கும்புற .. | நெல்வயல் .. | எம். பீ. றன்மெனிக்கா .. .. | 0 | 0 | 2 |
| 27B | அம்பலன்கும்புற .. | ஷை .. | ஏ. எம். கிரிபண்டா .. .. | 0 | 0 | 5·50 |
| 27C | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 3 |
| 33A1 | டமின்னககவத்த .. | ஷ்ரூட்டு .. | பி. சாமெல் நெயிதேயும் மற்றையோரும் .. | 0 | 0 | 4·60 |
| 33A2 | வெறலுககவத்த .. | தென்னந்தோட்டம் .. | டபிள்யு. சுவான் னெயிதே .. | 0 | 0 | 2 |
| 33B1 | டமின்னககவத்தா .. | ஷ்ரூட்டு .. | பி. சாமெல் நெயிதேயும் மற்றையேரும் .. | 0 | 0 | 19·50 |
| 33C1 | அலுத்வத்தெஎன .. | ஷ்ரூட்டு .. | ஏலியாஸ் நெயிதேயும் மற்றவர்களும் .. | 0 | 0 | 20·50 |
| 33D1 | ஷை .. | ஷ்ரூட்டு .. | ஷை .. .. | 0 | 0 | 1 |
| 33D2 | விகாரைஎன .. | சேனைநிலம் .. | ஏ. சிஞ்ஞப்புகாமியும் மற்றவர்களும் .. | 0 | 0 | 22 |
| 33D3 | டொறகட்வெல .. | நெல்வயல் .. | ஷை .. .. | 0 | 0 | 21 |
| 33D4 | விகாரைவத்தா .. | தென்னந்தொட்டம் .. | ஷை .. .. | 0 | 0 | 1·50 |
| 33E1 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 19 |
| 33E2 | டொறகடவெல .. | நெல்வயல் .. | ஷை .. .. | 0 | 1 | 6 |
| 33F1 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 7 |
| 33G | புலுககவத்த .. | ஷ்ரூட்டு .. | பி. சாமெல் நெயிதே .. | 0 | 0 | 15·50 |
| 34A | அம்பலன்கும்புரு .. | நெல்வயல் .. | ஏ. எம். கிரிபண்டா .. .. | 0 | 0 | 9 |
| 40A | வீகெனவத்த .. | காடு .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 7 |
| 40B | நககாஎனவத்த .. | தென்னந்தொட்டம் .. | ஏ. எம். கிரிபண்டா .. .. | 0 | 1 | 12 |
| 40C | வீகெனெவத்த .. | ஷை .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 4 |
| 43D1 | ருவித்தவத்த .. | ஷை .. | டபிள்யு. பி. இராசபக்சா .. | 0 | 0 | 8·50 |
| 45A | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 1 | 2 |
| 51A | ருவித்தகெல .. | சேனைநிலம் .. | ஏ. எம். கிரிபண்டா .. .. | 0 | 0 | 14 |
| 51B | வீகெனவத்த .. | தென்னந்தோட்டம் .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 14 |
| 52A | ஷை .. | ஷை (பகுதி) .. | ஷை .. .. | 0 | 0 | 7 |
| 52B | ருவித்தகெல .. | சேனைநிலம் .. | ஏ. எம். கிரிபண்டா .. .. | 0 | 0 | 6·50 |
| 52C | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 37 |
| 52D | டெல்கஸ்யாய அல்லது வீகெனவத்த .. | தென்னந்தோட்டம் .. | டபிள்யு. அம்புரேசியா பறனுந்து .. | 0 | 0 | 1 |
| 5½ | டங்காக்கும்புறகெல .. | ஷ்ரூட்டு .. | பி. இராசபக்சா .. .. | 0 | 0 | 3 |
| 27½ | அம்பலன்கும்புற .. | ஷை .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 5 |

உபமுடிவுக் கிராமப் படம் நொம்பர் 253. கிராமம்—கட்டுக்கம்பளைக்கற்பத்தில் பிறறிக்கல்கோறளையில் கிந்திறிப்போலா.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 3½ | டெல்கசியாய அல்லது வீகெனவத்த .. | வெளிநிலம் .. | டபிள்யு. அம்புரேசியா பறனுந்து .. | 0 | 0 | 0·25 |
| 4A | வீகெனவத்த .. | தென்னந்தோட்டம் .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 7 |
| 4B | நககாஎனவத்த .. | ஷை .. | ஏ. எம். கிரிபண்டாவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 9 |
| 4C | வீகெனவத்த .. | ஷை .. | பி. எம். சிஞ்ஞப்புகாமி கன்ஆராச்சி .. | 0 | 0 | 7·50 |
| 8A | டெல்கசியாய அல்லது வீகெனவத்த .. | வெளிநிலம் .. | டபிள்யு. அம்புரேசியா பறனுந்து .. | 0 | 0 | 1 |

உபமுடிவுக் கிராமப் படம் நொம்பர் 254. கிராமம்—கட்டுகம்பளை கற்பத்தில் பிற்றிக்கல் கோறளையில் கெந்திரிப்போலா.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2A | டெல்கசியாய அல்லது வீகெனவத்த .. | வெளிநிலம் .. | டபிள்யு. அம்புரேசியா பறனுந்து .. | 0 | 0 | 2·50 |
| 2B | கொறகாவத்த .. | தென்னந்தோட்டம் .. | ஜி. டி. சிறினேரிஸ் .. | 0 | 1 | 3 |
| 2C | கொறகாயாயெவத்த .. | ஷை .. | ஆர். டி. சுவாரிஸ் கென்டிறிக் .. | 0 | 0 | 30 |
| 2D | கோன்காவத்த .. | ஷை .. | ஜீ. டி. சிறினேரிஸ் .. | 0 | 0 | 18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஞூ ஆவணி மாசம் 28 ந் தேதியலன்று பின்னேரம் 1 மணிக்கு கிரியுல்ல றெஸ்றஹவுசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொல்கயையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1919 ம் ஞூ ஆடிமீ 29 ந் உ.

சி. ஆர். கம்பர்லண்ட்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,326, கொழும்பு.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஞூ (ஓகஸ்ட்) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் தெரிபட்டு அல்லது சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைககு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட காணிகள் அல்லது அவைகளில் ஏதேனொன்று உதவி ஏசென்று அவர்களுக்கு சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருககும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய தென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜி. எஸ். வூட்மேன்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விவரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக கொட்டா சுகாதாரசங்க எல்லைகளுக்குள்ளிருக்கும் எத்துல்கோட்டே கிராமத்திலிருக்கும் அணைத்திருககும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபட இலககம் 16,848. பகுதி 1.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | அங்கன்பிற்றிவா | 0 3 27 |

எல்லைகளாவன: வடகிழக்கு-டொன் மனுவல்கே டொன் கோணேலிஸஆல் உருத்தாடப்பட்ட மடன்ககும்புறுவும் டபுள்சு. ரி. கென்டிறிக் பெரீராவின் உருமைக்காரரால் உருத்தாடப்பட்ட மடன்ககும்புறுவும்: தெற்கு-99,787 ம் இலக்க உருமைப்படத்தில் காட்டிய நிலம்; தென்மேறகு-144,365 ம் இலக்க உருமைப்படத்தில் காட்டிய நிலமும், எம். சே. றெட்றிக்கோவாலும் மறறவர்களினாலும் உருத்தாடப்பட்ட கெல்பொத்தேகும்புறுவும்; வடமேறகு-எம். சே. றெட்டிறிக்கோவாலும் மறறவர்களினாலும் உருத்தாடப்பட்ட கெல்பொத்தேகும்புறுவும், டொன் மனுவல்கே டொன் கோணேலிஸஆல் உருத்தாடப்பட்ட மடன்ககும்புறுவும்.

பகுதி 2.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | கொஸ்ககஹவித்த அல்லது அங்கன்பிற்றியா | 0 3 10 |

எல்லைகளாவன; வடகிழக்கு-144,365 ம், 99,787 ம் இலக்க உருமைப்படங்களில் காட்டிய நிலங்கள்; தெறகும் தென்மேற்கும்-டொன் மனுவல்கே டொன் கோணேலிஸ்ஆலும், எம். பிலிப்பெரீராவாலும் மற்றவர்களினாலும் உருத்தாடப்பட்ட கொஸ்ககஹவித்த அல்லது அங்கன்பிறறியா; மேற்கு-எம். ஜே. றெட்டிறிக்கோவாலும் மறறவர்களினாலும் உருத்தாடப்பட்ட கெல்பொத்தேகும்புறு.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1140 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,327, கொழும்பு.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஞூ (ஓகஸ்ட்) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலொன்றுககு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட காணிகள் அல்லது அவைகளில் ஏதேனொன்று உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜி. எஸ். வூட்மேன்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விபரம்.

மேல்மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக கப்பிற்றிகம்கோறளை யற்றிககபற்று நாவன கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டு :—

பிரதமபட இலக்கம் 16,579.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | மொறகலகந்த | 2 0 5 |
| 2 | ஷை | 0 2 1 |
| | | 2 2 6 |

எல்லைகளாவன: வடகிழககு-முடியால் உருத்தாடப்பட்ட மொறகல்கந்த; தென்கிழக்கு-166,669 ம், 95,539 ம் உருமைப்படங்களில் காட்டிய நிலங்கள்; தென்மேற்கு-166,668 ம் இலக்க உருமைப்படத்தில் காட்டிய நிலம்; வடமேறகு-முடியால் உருத்தாடப்பட்ட மொறகல்கந்த.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1140 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 7,328, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸ்ரீ (ஒகஸ்ற) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே, கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலொன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் அல்லது அவைகளில் ஏதேனொன்று உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜி. எஸ். வூட்மேன்,
கொழும்பு, நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் கேவகம் கோறளை உடுகபற்றுவ வெலிக்கன்ன கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

| துண்டு. | நிலத்தின் பெயர். பிரதமபட இலக்கம் 16,069. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | வெலியோவித்தகண்ட | 4 1 3 |
| 2 | ஷை | 0 0 19 |
| | | 4 1 22 |

எல்லைகளாவன: வடகிழக்கு-296,320 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; கிழக்கு-(P. P. 16,069/3) ஆகிய முடியால் உருத்தாடப்பட்ட அவிட்டககவத்தவும் 259,397 ம் 298,455 ம் இலகக உருமைப்படங்களில் காட்டிய நிலங்களும்; தெற்கு-பி. டி. போலால் உருத்தாடப்பட்ட கல்கெத்தியலந்த; மேற்கும் வடமேற்கும்-எலமலவல கிராமத்தின் எல்லைகள்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1141 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,329, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸ்ரீ (ஒகஸ்ட்) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறை கச்சேரியில் டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஏ. ஹொற்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணியின் விவரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன்கோறளை கிழக்கிலுள்ள மகாபத்துவ வடக்கில் கிற்றுல்கொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டு:—

| காணித்துண்டு. | காணியின் பெயர். பிரதம படம் 16,251. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | தெல்காதொலகலே (தொலவுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) | 1 0 27 |

எல்லைகளாவன: வடக்கு-தெல்காதொல; கிழக்கு-முடிக்குரிய தெல்காதொலகேன; தெற்கு-321,977 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணி; மேற்கு-றன்துகேன, முடி சேமித்துவைத்திருக்கும் நிலம், (14,901 ம் பிரதம படத்தை 3,296 ம் காணித்துண்டு).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1142 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,330, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸ்ரீ (அகோஸ்று) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல்மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவர்கள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஏ. ஹொற்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறிக்கப்பட்ட காணியின் விவரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன் கோறளை கிழக்கிலுள்ள மகாபத்து தெற்கில் மோறகல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

| காணித்துண்டு. | காணிப் பெயர். பிரதமபடம் 16,248. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | கல்காகொடல்ல பிற்றகட்டிய (றோட்டுக்காகச் சேமித்த நிலம்) | 0 0 30 |
| 2 | கல்காகொடல்ல பிற்றகட்டிய | 0 1 33 |
| | | 0 2 23 |

எல்லைகளாவன: வடக்கு-கொறவலவிலிருந்து மீகாரென்னவுக்குப் போகும் பெரும் றோட்டு; கிழக்கு-134,562 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணி; தெற்கு-முடி உரித்தாடும் கல்காகொடல்ல; மேற்கு-வினியாவக் கிராம எல்லை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1142 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,331, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸ்ரீ (அகோஸ்று) ஆவணிமீ 8 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல் மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்குந் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஏ. ஹொற்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

### குறிக்கப்பட்ட காணிகளின் விபரம்.

மேல் மாகாணம், களுத்துறை டிஸ்திறிக், பஸ்துன் கோறளை கிழக்கிலுள்ள மகாபத்துவ வடக்கில் யக்குபிற்றிய என்னுங் கிராமத்தில், இத்துடனணைககப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

காணித்துண்டு. காணிப் பெயர். I.—பிரதமபடம் 16,243. விசாலம். ஏ. றூ. ப.

2 .. இன்டிகாகொடல்ல (வயல் நிலத்துக்கும் டோலவுக்கும் சேமிக்கப்பட்ட நிலம்) .. 0 2 11

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்தாடும் இன்டிகாகொடல்ல ; கிழக்கு-கல்பெட்டன்தொல ; தெற்கு-உடவத்தேகுலான முடி சேமித்து வைத்திருக்கும் நிலம் (16,243 ம் பிரதம படத்தின் 4 ம் துண்டுக் காணி) ; மேற்கு-321,170 ம் உரிமைப்படத்தில் விபரிக்கப்படும் காணி.

காணித்துண்டு. காணிப் பெயர். II.—பிரதமபடம் 16,243. விசாலம், ஏ. றூ. ப.

5 .. உடவத்தேகுலான (டோலவுக்காகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிலம்) .. 0 3 2

எல்லைகளாவன: வடக்கு-320,929 ம் பிரதம படத்தில் விபரித்திருக்கும் காணி, உடவத்தேகுலான முடி சேமித்து வைத்திருக்கும் காணி (16,243 ம் பிரதமபடத்தின் 4 ம் துண்டுக் காணி) ; கிழக்கும் தெற்கும்-கல்பெட்டன்டொல ; மேற்கு-முடிக்குரிய இன்டிகாகொடல்ல 320,929 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்கும் காணி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1143 ம் பககத்தின் படத்தைப் பார்க்குக.

---

### கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல.

#### சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நாற்கடகம், ஓலைப்பாய், ஓலைமடல், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை தும்புக்கட்டு, ஈக்குக்கட்டுக் கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் சிவியாதெரு உப்பளம், தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1919 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1920 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயுமிருத்தல் வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறை வருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானாகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் Tender for supplying Materials 1919-20 என்று உறையின் இடதுபக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1919 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிககடதாசி யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்பட மாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துக ளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப் பத்திரங்கள் பிழையென விலக்கப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக காட்டினவருக்கே மாதிரிக் கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் அவர் கேட்ட நாள்தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்கத் தவறினால், கட்டின காசு கவுண்மேந்துக்கு இனமாகும். அப்படித் தவறினவர் கவுண்மேந்து ஒப்பந்தங் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காறருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவர். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர் பிணைநிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அணைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களுங் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்பட மாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

பி. சீ. நிக்குலஸ்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1919 ம் ஞு ஆவணிமீ 4 ந உ.

---

### காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

முடிக்குரிய பூமியை விலைக்குவேண்ட அலைது குத்தகைக் கெடுப்பதற்கான கேள்வி அளவைகள் இனிமேல் கிழ்மாகாணத்தின் பகுதிகளில் முறை முறையாக நடத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இம்மாகாணம் பிரிக்கப்பட்டிருப்பதாவது :—

1 ம் பகுதி—இது மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் கோறளை, எருவூர், உறுகாமம், விந்தனை, மண்முனை (வடக்கும் தெற்கும்) எருவில் போரதீவுப் பற்றுகளை அடக்கும்.

2 ம் பகுதி—இது திரிகோணமலை டிஸ்திறிக முழுவதையும் அடக்கும்.

3 ம் பகுதி—இது மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் நாடுகாடு, சம்மாந்துறை, கரைவாகு, நிந்தவூர், அக்கரை பானைப்பற்றுகளை அடக்கும்.

3. 3 ம் பகுதி 1919 ம் ஆண்டு இங்கிலீசுக்கு புரட்டாதி மாதம் 15 ந் திகதியன்று அளவைக்காக மூடப்படும். இந்தப்பகுதிக் குட்பட்ட பூமிகளின் கேள்விப்பத்திரங்கள் ஒன்றும் அத்தேதியின்பின் அளவைத்தலைவருக்கு அனுப்பப்பட மாட்டாது. ஆகிலும் இவ்வேற்பாடு இப்பகுதிக்குள்ளிருக்கும் பூமிகளை நோக்கி அவைகளின் விற்பனவுக்கு அலைது குத்தகையில் கொடுப்பதற்கு ஏதாகுதல் தடையிருக்குமோ வென்பதை நிச்சயித்ததிற்பொருட்டு கேள்விப்பத்திரம் எனக்கனுப்பிப் பதிவுசெய்விப்பதைத் தடைசெய்யமாட்டாது.

4. கேள்விப்பூமி அளவை நடத்தப்படாமல் அதன்பின் கட்டளையிடப்படும் பகுதி 1 ம் இலக்கப் பகுதியும் அதன்பின் 2 ம் இலக்கப்பகுதியுமாம். இவ்விரண்டு பகுதிகளிலும் முடிக்குரிய பூமியை விலைக்கு வேண்ட அலைது குத்தகைக் கெடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கூடியளவு சுறுக்கிலெனக்கு அனுப்பப்படல வேண்டும்.

5. 1 ம் இலக்கப் பகுதியை அளவைக்காக மூடப்படும் திகதி சுறுக்கில பிரசித்தப்படுத்தப்படும். அது 3 ம் இலக்கப் பகுதியிலுள்ள அளவைகள், ஏறக்குறைய முற்றுப்பெற்ற திகதியைக் குறிக்கும்.

1919 ம் ஆண்டு ஆடிமீ 31 ந உ.

சீ. ஈ. டபின்து,
கிழ்மாகாண அரசாட்சி ஏசன்றுத்துரைக்காக.

---

### தொழிலுக்குப்படாதவரின் அறிவித்தல்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருகும் சாமுவெல் மெந்திஸ் விக்கரமசிங்க ஆகிய நான், 1907 ம் ஆண்டு 1-வது ஆடினன்ஸ் 1 B பிரிவின்படி 2 ம் கட்டளைச்சட்டப்படி குருநாகல் டிஸ்திறிக்கில் இன்றையிலிருந்து மூன்று மாதங்களுக்குபின் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் வேலைபார்க்க றெஜிஸ்ற்றிருர் ஜனறல் துரை அவர்களிடம் மனுப்பண்ண எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

கொழும்பு, 1919 ம் ஆண்டு ஆடிமீ 18 ந உ.

எஸ். எம். விக்கரமசிங்க.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.